**டிசம்பர் – 16**

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

- தமிழ்நாடு மாநில அரசானது தமிழகத்தில் உள்ள பின்வரும் 2 நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கப்பட்ட இடங்களாக அறிவித்துள்ளது. அவை
    - திருவண்ணாமலை மாவட்டத்தின் கீழரவந்தவாடி கிராமத்தில் உள்ள அம்மாகுளம் மற்றும்
    - அரியலூர் மாவட்டத்தின் அழகர்மலை கிராமத்தில் உள்ள ஒரு யானைச் சிலை
- அம்மாகுளம் ஆனது நாயக்கர் ஆட்சிக் காலமான 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.
- அழகர்மலையில் உள்ள யானைச் சிலையானது 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.
- தமிழ்நாடு தொல்லியல் துறையானது ஏற்கெனவே 92 பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## விஸ்வாஸ் (VISVAS) திட்டம்


- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகமானது வன்ஜித் இகாய் சமூக் அவுர் வர்கோன் கி அர்த்திக் சஹாயாதா (VISVAS - Vanchit Ikai Samooh aur Vargon ki Aarthik Sahayta) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- இது ரூ.3 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டுள்ள பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது சுய உதவிக் குழுக்களுக்கான ஒரு வட்டி இடையீட்டுத் திட்டமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## கோல்டுமேன் சுற்றுச்சூழல் விருது – 2020

- இந்த விருதானது ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, தீவுகள் மற்றும் தீவு நாடுகள், வட அமெரிக்கா மற்றும் தெற்கு & மத்திய அமெரிக்கா ஆகிய உலகின் 6 புவியியல் பகுதிகளிலிருந்தும் தலா ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப் படுகின்றது.
- இது பசுமை நோபல் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இந்த விருதானது கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கோல்டுமேன் என்ற ஒரு சுற்றுச்சூழல் அமைப்பினால் வழங்கப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் விருதுப் பட்டியல் பின்வருமாறு
    - சிபெசி ஏசிகியல், கனடா
    - கிறிஸ்டல் ஆம்ப்ரோஸ், பஹாமாஸ்
    - லேடி பெச், மெக்சிகோ
    - லூசி பின்சன், பிரான்ஸ்

- நெபோன்டி நென்குய்மோ, ஈகுவடார்
- பால் செயின் வா, மியான்மர்.




## யுனெஸ்கோ கல்வி அறிக்கை

- யுனெஸ்கோவானது '2020 ஆம் ஆண்டு இந்தியாவிற்கான கல்வியின் நிலை குறித்த அறிக்கை : தொழில்சார் கல்வி முதலில்' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் யுனெஸ்கோ புது தில்லியின் முதன்மை அறிக்கைகளில் ஒன்றாகும்.
- இதன் முக்கிய நோக்கம் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் உள்ள கல்வி இலக்குகளை நோக்கிய செயல்பாடுகளைக் கண்காணிப்பதாகும்.
- இந்த அறிக்கையின் 2வது பதிப்பானது தொழில்நுட்பக் கல்வி, தொழில்சார் கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் மீது கவனம் செலுத்துகின்றது.
- தேசிய திறன் மேம்பாட்டு மற்றும் தொழில்முனைவுக் கொள்கையானது 2022 ஆம் ஆண்டில் 150 மில்லியன் இந்திய மக்களுக்கு திறன் அளிக்க இலக்கு நிர்ணயித்து உள்ளது.
- இந்தக் கொள்கையானது 2015 ஆம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப் பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குறுகிய பட்டை இணையப் பொருட்கள் அமைப்பு

- பிஎஸ்என்எல் ஆனது ஸ்கைலோவுடன் (Skylo) இணைந்து இந்தியாவில் உலகின் முதலாவது செயற்கைக் கோளை அடிப்படையாகக் கொண்ட குறுகிய பட்டை இணையப் பொருட்கள் (IOT - internet of things) என்ற அமைப்பை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது செயற்கைக் கோளை அடிப்படையாகக் கொண்ட குறுகிய பட்டை இணையப் பொருட்கள் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்புமுனையைக் கொண்டு வர உள்ளது.
- இது பரந்த வரம்புடன் கூடிய புதிய இணையப் பொருட்களுக்கான சாதனங்களில்

செயல்படுத்துவதற்காக வேண்டி மேம்படுத்தப்பட்ட ஒரு குறைந்த மின் பரந்த பரப்புத் தொழில்நுட்பமாகும்.


- இது சாதனங்களின் மின் நுகர்வு, அலைக் கற்றைத் திறன் மற்றும் அந்த அமைப்பின் திறன் ஆகியவற்றை மேம்படுத்த உள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது இரண்டு வாகனங்கள் மற்றும் இதர IOT சாதனங்களை இணைப்பதற்குப் பயனுள்ளதாக உள்ளது.

## தரவுப் பேச்சற்ற கேட்பொலி

- சமீபத்தில் தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிறுவனமானது (NASA - National Aeronautics and Space Administration) நண்டு வடிவ நெபுலாவின் தரவுப் பேச்சற்ற ஒரு கேட்பொலியைப் பகிர்ந்துள்ளது.
- இந்தக் காணொலியானது நெபுலா தனது பல்வேறு நிறங்களை அடிப்படையாகக் கொண்டு இசையாக மாற்றம் பெறுவதைக் காட்டுகின்றது.
- இதில் நீல நிழல்கள் பேஸ் என்ற ஒரு ஒலி வகையாகவும் வெள்ளை நிழல்கள் மரக் காற்றுகளாகவும் மாற்றம் பெறுகின்றன.
- நெபுலா என்பது ஹைட்ரஜன், தூசு, ஹீலியம் மற்றும் அயனியாக்கப்பட்ட வாயுக்களின் விண்மீன்களுக்கிடையேயுள்ள ஒரு மேகக் கூட்டங்களாகும்.
- தரவுப் பேச்சற்ற கேட்பொலி என்பது தரவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக வேண்டி ஏற்படுத்தப்பட்ட ஒலியின் பயன்பாடாகும்.

## குவாண்டம் பாதுகாப்பு தகவல் பகிர்ந்தளிப்பு

- சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது குவாண்டம் பாதுகாப்பு தகவல் பகிர்ந்தளிப்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தனது 2 ஆய்வகங்களுக்கிடையே தகவல் தொடர்புச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்தச் சோதனையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வகம், இம்ராத் ஆராய்ச்சி மையம் ஆகிய 2 ஆராய்ச்சி மையங்கள் கலந்து கொண்டன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## நுண்-காலநிலை மாற்றம் அடைதல்

- சமீபத்தில் “காலநிலை நிகழ்வுகளுக்காக இந்தியாவைத் தயார் செய்தல்” என்ற ஒரு ஆய்வானது ஆற்றல், சுற்றுச்சூழல், நீர் குறித்த மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

- இந்தியாவில் மிகக் கடுமையான காலநிலை உள்ள இடங்கள் வரைபடமிடப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- இந்த ஆய்வானது நாட்டில் கடந்த 50 ஆண்டுகளில் வெள்ள நிகழ்வு ஏற்படுதலானது 8 மடங்காக அதிகரித்துள்ளதைக் கண்டறிந்துள்ளது.
- நுண் காலநிலை மண்டல மாற்றம் அடைதலில் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- மிகக் கடுமையான காலநிலை நிகழ்வுகள் என்பவை வெள்ளம், புயல், வெப்பம் மற்றும் குளிர்காற்று ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ஒரு சிறிய பகுதி அல்லது மாவட்டத்திற்குள் காலநிலை அமைப்பில் ஏற்படும் மாற்றமானது நுண் காலநிலை மண்டலம் மாற்றம் அடைதல் என்பதாகும்.

## உமிழ்வுகள் இடைவெளி அறிக்கை 2020

- இந்த வருடாந்திர அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வெளியிடப் படுகின்றது.
- இது இந்த நூற்றாண்டில் உலக வெப்பமயமாதலை 2°Cற்குக் குறைவாகவும் கட்டாயம் 1.5°Cற்குக் குறைவாக வைத்திருக்க வகை செய்யும் பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் எதிர்பார்க்கப் படும் உமிழ்வுகள் மற்றும் நிலைகளுக்கிடையேயான அளவை அளவிடுகின்றது.
- ஜி20 நாடுகள் அதிக அளவிலான உமிழ்வுகளை வெளியிடுகின்றன.

## கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகள் ($CO_2$) வீழ்ச்சி

- கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் உலக CO2 உமிழ்வானது 7% என்ற அளவில் குறைந்துள்ளது.
- தரைவழிப் போக்குவரத்தானது CO2 உமிழ்வுகளில் 5ல் ஒரு பங்கிற்கு மேலாகப் பதிவாகி உள்ளது.
- இது புவி அமைப்பு அறிவியல் தரவு என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின் படி கணிக்கப்பட்டதாகும்,
- உலக கரிமத் திட்டமானது 2020 ஆம் ஆண்டில் உலகமானது வான்வெளியில் 37 பில்லியன் அமெரிக்க டன்கள் என்ற அளவிலான CO2 உமிழ்வை வெளியிட்டுள்ளதாக கணித்து உள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட CO2 உமிழ்வான 40.1 பில்லியன் அமெரிக்க டன்கள் என்ற அளவை விடக் குறைவானதாகும்.
- இந்தத் திட்டமானது உமிழ்வுகளைக் கண்காணிக்கும் சர்வதேச விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு குழுவினால் மேற்கொள்ளப் பட்டதாகும்.

## காலநிலை உயர் இலட்சிய மாநாடு 2020

- இந்த மாநாடானது பாரிஸ் ஒப்பந்தத்தின் 5வது ஆண்டைக் குறிப்பதற்காக ஐக்கிய நாடுகள், பிரான்சு மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றினால் இணைந்து நடத்தப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைவர் காலநிலைச் சமநிலையை அடையும் வரை உறுப்பு நாடுகள் "காலநிலை அவசரச் சூழ்நிலையை" அறிவிக்குமாறு

அந்நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனானது உலகில் 4வது மிகப் பெரியது என்றும் அது 2022 ஆம் ஆண்டில் 175 ஜிகாவாட் அளவை எட்டும் என்றும் இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார்.
- மேலும் அவர் இந்தியாவானது 2030 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனானது 45 ஜிகாவாட் என்ற அளவை எட்ட அதிக அளவிலான குறிக்கோள்களைக் கொண்டுள்ளது என்றும் அறிவித்துள்ளார்.
- இந்தியாவானது பாரிஸ் ஒப்பந்த இலக்குகளை அடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.
- இந்தியாவானது தனது கார்பன் உமிழ்வு தீவிரத் தன்மையை 2005 ஆம் ஆண்டில் இருந்த நிலையை விட 21% என்ற அளவில் குறைந்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2020 ஆம் ஆண்டின் இளம் கணிதவியலாளர்களுக்கான ராமானுஜர் விருது

- இந்த விருதானது பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள அசல் மற்றும் பயன்பாட்டுக் கணிதவியல் மையத்தைச் சேர்ந்த கணிதவியலாளரான டாக்டர் கரோலின் அரௌஜோ என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது சர்வதேசக் கோட்பாட்டு இயற்பியல் மையம் மற்றும் சர்வதேசக் கணித ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்து இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நிதியளிக்கப்பட்டு, வளரும் நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது.
- இவ்விருதானது இயற்கணித வடிவியலில் தலைசிறந்த அவருடைய பணிக்காக வேண்டி அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதைப் பெறும் இந்தியாவைச் சேராத முதலாவது கணிதவியலாளர் இவரே ஆவார்.
- டாக்டர் அரௌஜோ அவர்கள் சர்வதேசக் கணித ஒன்றியத்தில் கணிதத்திற்கான பெண்கள் குழுவின் துணைத் தலைவராக உள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய விளையாட்டு விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டின் இந்திய விளையாட்டு விருதுகளானது இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பினால் வழங்கப் பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா மற்றும் துப்பாக்கி சுடுதல் வீரரான இளவேனில் வாலறிவன் ஆகியோர் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்கள் விருதினை வென்றுள்ளனர்.
- கிரிக்கெட் வீரரான அனில் கும்ப்ளே அவர்கள் டென்விக் விளையாட்டுகள் என்ற அவருடைய நிறுவனத்தின் சார்பாக "விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த நிறுவனம்" (தனியார் துறை) என்ற ஒரு விருதைப் பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம் – டிசம்பர் 14

- இந்தத் தினமானது உலக வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஆற்றல் வளங்களைப் பாதுகாப்பது குறித்த முயற்சிகளை ஊக்குவிப்பதன் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தியாவில் ஆற்றல் பாதுகாப்புச் சட்டமானது 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் முகமையினால் (BEE - Energy Efficiency Bureau) செயல்படுத்தப் படுகின்றது.
- BEE என்பது ஆற்றல் பயன்பாடு குறித்த கொள்கைகளை வடிவமைப்பதற்காக இந்திய அரசின் கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★